## பாடம் - 3. காட்டுக்குள்ளே பாட்டுப்போட்டி

**பாடம்: தமிழ்**

**வகுப்பு: 4**

### அ. வினாக்களுக்கு விடையளிக்க.

**1. காட்டில் நடந்த போட்டியின் பெயர் என்ன?**

காட்டில் நடந்த போட்டியின் பெயர் 'பாட்டுப்போட்டி' ஆகும்.

**2. காக்காவின் பாட்டைக் கேட்ட சிங்கராஜா என்ன கூறினார்?**

காக்காவின் பாட்டைக் கேட்ட சிங்கராஜா "ஆகா.... என்ன சுருதி சுத்தம்; அற்புதம்!" என்று கூறினார்.

**3. பாட்டு ராணி' பட்டம் பெற்ற பறவை எது?**

'பாட்டு ராணி' பட்டம் பெற்ற பறவை காகம்.

### ஆ. புதிர்களைப் படிப்போம்! விடை காண்போம்! படத்துடன் பொருத்துவோம்!

1. இரவில் உணவு தேடிடுவேன், தலை கீழாகத் தொங்கிடுவேன். நான் யார்?
   **வெளவால்**
2. கரைந்து கரைந்து அழைத் திடுவேன், கூட்டமாக வாழ்ந்திடுவேன். நான் யார்?
   **காகம்**
3. பச்சை நிறத்தில் இருந்திடுவேன், பழங்களைக் கொத்தித் தின்றிடுவேன். நான் யார்?
   **கிளி**
4. மழை வருமுன்னே உணர்த்திடுவேன், தோகை விரித்து ஆடிடுவேன். நான் யார்?
   **மயில்**
5. வெண்மை நிறத்தில் நானிருப்பேன், ஒற்றைக் காலில் நின்றிடுவேன், நான் யார்?
   **கொக்கு**

### இ. கூடுதல் வினாக்கள்.

**1. பாட்டுப்போட்டி நடைபெற்ற போது நடுவராகத் தீர்ப்பு வழங்கிய பறவை எது?**

பாட்டுப்போட்டி நடைபெற்ற போது நடுவராகத் தீர்ப்பு வழங்கிய பறவை மயில்.

**2. போட்டி நடைபெற்ற போது அனைத்து பறவைகளும் எவ்வாறு இருந்தன?**

போட்டி நடைபெற்ற போது அனைத்து பறவைகளும் உற்சாகமாய் இருந்தன

MATRIC. Hr. Sec. SCHOOL ACADEMY KOSAVAPATTY KNOWLEDGE IS POWER